# தலைவர் எலந்தகுட்டை ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : திரு.ஆ. வெங்கடாசலம்

ந. க. எண் : 01/2023-2024 நாள் : 30.01.2024

பொருள் : மனைப்பிரிவு அனுமதி - நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் நாமக்கல் ந.க.எண்NKL/2RVRY64W/9934/2023 – நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் எலந்தகுட்டை ஊராட்சி/கிராமம் ச.எண்- 338/5,6 - ல் 2.1365 ஏக்கர் பரப்பில் அமையும் 39 குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

1. மனுதாரர் திரு.A.நடேசன் பாதரை
   அவர்களின் விண்ணப்பம் நாள் : 11.03.2023
2. இவ்வலுவலக கடிதம் இதே எண்: NKL/2RVRY64W/9934/2023 நாள்:27.04.2023
3. நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின்
   கடிதம் ந.க. எண் இ 4/2429/2023 நாள்: 10.03.2023.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை
   கடிதம் ந.க. எண் . 19799/2020 /போ ,நாள் : 24.12.2020.
5. சார்பதிவாளர் குமாரபாளையம் அவர்களின் கடிதம் ந.க. எண்
   3471/2023 மற்றும் 3472/2023 , நாள் :09.05.2023.
6. அரசாணை எண். 138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி
   (நவ4(3)த்துறை,நாள் : 04.06.2004.
7. அரசாணை எண்.79,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி
   (நவ4(3)த்துறை,நாள் : 04.05.2017 .
8. அரசாணை எண்.18,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்
   துறை,நாள் : 04.02.2019 மற்றும் அரசாணை எண்,16. நகராட்சி
   நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 31.01.2020.
9. அரசாணை எண்.141,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி
   (நவ4(3)த்துறை நாள் : 23.09.2020 .
10. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி
    (நவ4(3)த்துறை நாள் : 09.12.2020 .
11. அரசு கடிதம் எண். 19113/நவ4(3)2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற
    வளர்ச்சித்துறை நாள் : 30.08.2017
12. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை
    ந.க.எண் : 13686/2017/I.A1,நாள் : 08.09.2017.
13. எலந்தக்குட்டை ஊராட்சி மன்றத் தீர்மானம் எண் :58 , நாள் : 29.01.2024

ஆணை :

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம்,பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் எலந்தகுட்டை ஊராட்சி/கிராமம், சர்வே எண். 338/5,6-ல் 2.1365 ஏக்கர் பரப்பில் அமையும் 39 குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான உத்தேசங்கள் பரிசீலிக்கப்பட்டு பார்வை 2- ல் சுட்டிய 27.04.2023 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு பார்வை 1- ல் சுட்டிய கடிதம் நாள் : 11.03.2023 ன் மூலம் சாலை மற்றும்

பொது ஒதுக்கீடுகள் ஊராட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் எண்.3 023 நாள் 27.04.2023 மற்றும் மின் பகிர்மான இடத்தை மின்சார வாரியத்திடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் எண். 3472/2023 நாள்:27.04.2023 பெறப்பட்டதை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது . ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/ LAYOUT NO . 196/2023 என எண்ணிடப்பட்டு 39 மனைப் பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம் , பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் எலந்தகுட்டை ஊராட்சி /கிராமம் ,சர்வே எண். 338/5,6 -ல் 2.1365 ஏக்கர் பரப்பில் உள்ள நிலமானது நாமக்கல் நகர் ஊரமைப்பு 'உதவி இயக்குனர் அலுவலகத்தால் கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**உத்தேச மனைப்பிரிவிற்கான பரப்பளவு :**

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு 2.1365 ஏக்கர் அல்லது 8646.11 ச.மீ

மேற்காணும் 39 மனைப்பிரிவிற்கான அமையும் இடத்திற்கு மனையிட ஒப்புதல்.

சர்வே எண். 338/5,6 =58414 X 100 = 5841400 X 3/100

ரூ : 176000

| | |
|---|---|
| 0217 – Urban Development<br>60- other Urban Development Schemes<br>800 – other Receipts<br>AS – Receipts under Lands use conversion charges<br>227 Non – taxation fees – 09 Collections.<br>( DPC 0217-60-800-AS-22709) | சலான்மூலம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.<br>சலான்எண்.20240122005665<br>BANK : SBI திருச்செங்கோடு<br>நாள் : 28.06.2022 |

தற்சமயம் மேற்படி குமாரபாளையம் வட்டம்,பள்ளிபாளையம் ,ஊராட்சிஒன்றியம் எலந்தகுட்டைஊராட்சி/கிராமம்,சர்வே எண். 338/5,6 -ல் 2.1365 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள இடத்திற்கு பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் எலந்தகுட்டை ஊராட்சி / கிராமம் மன்ற தீர்மான எண். 58/29.01.2024 -ன் படி கீழ்கண்டவாறு நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் :**

1. நாமக்கல் நகர ஊரமைப்பு துணை இயக்குனர் அவர்களின் ந.க. எண். NKL/2RVRY64W/9934/2023 நாள்:27.04.2023 உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றப்பட வேண்டும்.

2. உத்தேச மனையிடதொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விவரங்களை இவ்வலுவக அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.

3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்திட அனுமதி இல்லை.

4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்

5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவர்.

6. பத்திர பதிவுகள் மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் இம்மனை ஒப்புதல் உத்தரவு முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

தலைவர்
எலந்தக்குட்டை ஊராட்சி
எலந்தக்குட்டை

பெறுநர்

திரு. A.நடேசன்
1/290, பாதரை கிராமம்,
சௌதாபுரம் கிராம அஞ்சல்,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல் :-

1.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் நாமக்கல் அவர்களுக்கு தகவலுக்காக பணிதனுப்படுகிறது

2.சார்பதிவாளர் குமாரபாளையம் , நாமக்கல் மாவட்டம்

3.கண்காணிப்பு பொறியாளர்,தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நாமக்கல் மாவட்டம்

4.வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), பள்ளிபாளையம் வட்டாரம் , நாமக்கல்.